DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM
JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.

Case No.O.S. No. 17/2025

**பி.சா. 1 – செல்வக்குமார் த–பெ. முத்துச்சாமி நாள் – 20.01.2026.**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் தாவா சொத்தினை 30.04.2007 ல் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். இந்த வழக்கு 2013 ம் வருட இறுதியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற தேதியில் இருந்து தாவா தாக்கல் செய்த தேதி வரையிலும் அந்த சொத்தினை சுவாதீனத்தினை பெற நான் எந்த நடவடிக்கையும் எடுத்திடவில்லை என்றால் நான் தான் சுவாதீனத்தில் உள்ளேன். எந்த தேதியில் நான் சொத்தினை என் சுவாதீனத்திற்கு எடுத்துக் கொண்டேன் என்றால் கிரையம் பெற்ற ஒரு மாதத்தில் சுவாதீனம் எடுத்தேன். தற்போது சொத்தின் சுவாதீனம் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. நான் கிரையம் பெற்ற தேதியில் இருந்து இன்று வரையிலும் வாதிகள் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றும் நான் சுவாதீனத்தில் இருந்து வருவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் தான் சுவாதீனத்தில் இருப்பதாக எனது எதிர்வழக்குரையிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லிடவில்லை என்றால் தவறு, சொல்லியுள்ளேன்.

2. தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு எண் என்ன என்றால் ஞாபகமில்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டில் நான் சுவாதீனத்தில் உள்ளதாக சொல்லும் போது நான் தான் அதிலுள்ள மின் இணைப்பிற்கு பணம் செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. அந்த வீட்டிற்கு உள்ள குடிநீர் இணைப்பிற்கு யார் பணம் செலுத்தி வருகிறார் என்றால் நான் தான் செலுத்தி வருகிறேன். அந்த வீட்டிற்கு சொத்து வரியும் நான் தான் செலுத்தி வருகிறேன். நான் தான் குடிநீர் மற்றும் சொத்து வரி ஆகியவற்றினை செலுத்தி வருகிறேன் என்று சொல்லும் போது அதன் ரசீதுகளை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் முடியும். இதுவரையிலும் அதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இன்று வரையிலும் வாதிகள் தான் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றும், அவர்கள் தான் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு உண்டான குடிநீர், மின் இணைப்பு மற்றும் சொத்து வரி ஆகியவற்றினை செலுத்தி வருகிறார்கள் என்றும் அதை ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் தவறு.

3. 30.04.2007 ம் தேதியில் தாவா சொத்து தொடர்பாக 2 ம் பிரதிவாதியின்

சகோதரர் செந்தில்குமார் மற்றும் 2ம் பிரதிவாதி ஆகியோர் செய்திருந்த கிரைய ஒப்பந்த பத்திரம் ரத்து செய்யப்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அன்று தான் நான் சொத்தினை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். 2007ல் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தப்படி கிரையத் தொகை ரூபாய் ஒரு இலட்சம் என்றால் சரிதான். நான் கடந்த 2006ம் வருடத்தில் தாவா சொத்திற்கு செய்து கொண்டதாக சொல்லப்படும் கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள மதிப்பு ரூ.90,000/- என்று சொன்னால் சரிதான். ஆனால் கிரையத்தின் மதிப்பு ரூ.90,000/- என்றால் சரிதான். ரூபாய் ஒரு இலட்சத்திற்கு வழக்கு சொத்தினை பொருத்து ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்த போது நான் ஏன் ரூபாய் 90,000/-க்கு வாங்கினேன் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. 29.03.2007ல் உள்ள பொது அதிகார ரத்து பத்திரத்தினை பற்றி நானும் 2ம் பிரதிவாதியும் தெரிந்து கொண்டு வேண்டும் என்றே சொத்தினை அபகரிக்க வேண்டி இந்த கிரையத்தினை ஏற்படுத்திக் கொண்டதாக சொன்னால் தவறு. அதனால் தான் இன்று வரையிலும் தாவா சொத்தினை நான் சுவாதீனம் எடுக்காமல் வாதிகளின் சுவாதீனத்தில் சொத்து இருந்து வருவதாக சொன்னால் தவறு.

4. இந்த கிரைய பத்திரத்தினை தவிர தாவா சொத்தினை பொருத்து 2ம் பிரதிவாதியோ அல்லது வாதியோ எழுதிக் கொடுத்த பத்திரம் எதுவும் என்னிடம் இல்லை என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி எதுவும் என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால் பொது அதிகார பத்திரம் மட்டும் கொடுத்தார். அந்த பொது அதிகார பத்திரத்தினை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அதில் 17ம் சரத்தில் 2ம் பிரதிவாதி வாதியிடம் கணக்கு வழக்கு ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 20.11.2006ம் தேதியல் நான் 2ம் பிரதிவாதியிடம் ஏற்படுத்திக் கொண்ட அசல் கிரைய ஒப்பந்தத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள், யாரிடம் ஸ்டாம்ப் பேப்பர் வாங்கப்பட்டது என்பது பொருத்து எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் 20.11.2006ல் எந்த கிரைய ஒப்பந்தமும் ஏற்படுத்தவில்லை என்றும் நீதிமன்றத்தினையும் வாதிகளையும் ஏமாற்ற வேண்டி அவ்வாறு சொல்கிறேன் என்றால் தவறு.

5. வாதி 2ம் பிரதிவாதியிடம் கடந்த 06.11.2007ல் கடனாக ரூபாய் ஒரு இலட்சம் வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதேபோல் 26.03.2007ம் தேதி அசல் மற்றும் வட்டியுடன் சேர்த்து 2ம் பிரதிவாதிக்கு வாதிகள் அந்த பணத்தினை திருப்பிக் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து அன்னூர் – சத்தியமங்கலம் மெயின்ரோட்டில் இருந்து சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை சுற்றிலும் சுமார் ஒரு கிலோமீட்டர் சுற்றளவில் தற்போது மில், வீடுகள், தொழிற்சாலைகள் உள்ளது என்றால் சரிதான். தாவா

சொத்தில் தற்போது மதிப்பு ஒரு செண்ட் சுமார் ஐந்து இலட்சம் இருக்கும் என்றால் அவ்வளவு இருக்காது ஆனால் சரியாக மதிப்பு தெரியாது. தாவா சொத்து சுமார் ஐந்து இலட்ச ரூபாய்க்கு மேலாக மதிப்பிருக்கும் என்று கற்றறிந்த வழக்கறிஞரான எனக்கு தெரிந்து கொண்டே தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு.

6. தாவா சொத்தின் விஸ்தீரணம் மொத்தம் 52 செண்ட் என்றால் சரிதான். தாவா சொத்தின் மதிப்பு சுமார் இரண்டரை கோடி இருக்கும் என்றும், நான் அதை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக ஒரு கிரைய பத்திரம் ஏற்படுத்திக் கொண்டுள்ளேன் என்று சொன்னால் தவறு. தாவா சொத்தில் வாதிகள் குடியிருந்து கொண்டு மீதியிடத்தில் அவர்கள் விவசாய வேலைகள் செய்து வருவதாக சொன்னால் தவறு. தாவா சொத்தில் பழைய வீட்டின் அருகில் அவர்கள் புது வீடு கட்டி அங்கு வாதிகள் குடியிருந்து வருவதாக சொன்னால் தவறு. வழக்கு சொத்தில் வாதிகள் விவசாயம் செய்யவில்லை என்றும், புது வீடுகட்டி குடியிருந்து வருவதை மறுத்துரைத்துள்ள போது அதை நீதிமன்ற ஆணையாளர் மூலம் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லையா என்றால் இல்லை. 06.11.2006 ம் தேதியில் 1 ம் வாதி 2 ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணத்தினை கடந்த 9.03.2007 ல் ரத்துசெய்த பின்பும் அதை தெரிந்து கொண்டே நான் மற்றும் 2 ம் பிரதிவாதி, அன்னூர் சார்பதிவாளரின் சட்ட முரணான துணையுடன் வாதிகளின் சொத்தினை அபகரிக்க வேண்டி 30.04.2007 ம் தேதி ஏற்படுத்திக் கொண்ட கிரைய பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் தவறு. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் தவறு.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

sd/-V.Monika
District Munsif Cum Judicial Magistrate,
Annur.